கூடலூர் நகராட்சி(நீலகிரி)
31.08.2020 ம் தேதி திங்கள் கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற்ற இந்நகராட்சியின்
நகர்மன்ற சாதாரன கூட்டத்தின் பொருட்கள்
தலைமை– திரு.வீ.பாஸ்கரன்.எம்.ஏ.,
தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்

1) இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பொது மக்களுக்கு தூய்மை பாரதம் திட்டம் மற்றும் திடக்கழிவு மேலாண்மை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கான Sky man power agency மூலம் 5 பரப்புரையாளர்கள் மற்றும் ஒரு மேற்பார்வையாளர் ஆகியோர்களுக்கு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரால் பணியமர்த்தப்பட்டுள்ளதை மேற்கண்ட பணியாளர்களுக்கு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரின் உத்தரவிற்கிணங்க ஊதியம் வழங்க தனி அலுவரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** அனுமதி வழங்கலாம்

2) இந்நகராட்சி பொது சுகாதார பிரிவு வாகனம் மற்றும் ஈப்பு வாகனங்களை இயக்குவதற்கு ஒப்பந்த அடிப்படையில் ஓட்டுநர்களை நியமனம் செய்து பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதற்கான ஒப்பந்த காலம் 30.06.2020 உடன் முடிவடைந்து விட்டதால் கூடுதலாக 4 மாதங்களுக்கு பணி நீட்டிப்பு செய்தும் அதற்கான செலவினம் ரூ.5.50 இலட்சத்திற்கு தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** அனுமதி வழங்கலாம்

3) இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 16 மாக்கமூலா சாலை முதல் குன்னுமேடு வரை சிமெண்ட் சாலை அமைக்க பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2017–2018 திட்ட நிதியின் செயல்முறை ஆணை Proc A5 No.2047.2019 நாள்01.07.2020ன் படி உத்திரவு அளித்துள்ளார். மேற்படி பணிக்கு 06.08.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விபரம் |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.16 மாக்கமூலா சாலை முதல் குன்னுமேடு வரை சிமெண்ட் சாலை அமைத்தல். | ரூ. 6.00 | திரு. நிசார் ஒப்பந்ததாரர் | 0.01% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | திரு. சபீஸ் ஒப்பந்ததாரர் | 0.45% மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்படி ஒப்புநோக்கு பட்டியலின் படி 0.01% குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு. நிசார் ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** 1)அனுமதி வழங்கலாம்
2) 0.01% குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு. நிசார் ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி ஏற்று பணி உத்தரவு வழங்கலாம்.

4) இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 8 நந்தட்டி போஸ்ட் ஆபீஸ் முதல் நஞ்சா கவுடர் வீடு வரை சிமெண்ட் சாலை அமைக்க பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2017–2018 திட்ட நிதியின் செயல்முறை ஆணை Proc A5 No.2047.2019 நாள்01.07.2020ன் படி உத்திரவு அளித்துள்ளார். மேற்படி பணிக்கு 06.08.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விபரம் |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 8 நந்தட்டி போஸ்ட் | ரூ. 5.00 | திரு. ஜீவகன் | 0.003% மதிப்பீட்டை |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆபீஸ் முதல் நஞ்சா கவுடர் வீடு வரை சிமெண்ட் சாலை அமைத்தல். | | ஒப்பந்ததாரர் | விட குறைவு |
| | | | திரு. உசைன் ஒப்பந்ததாரர் | 0.18% மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்படி ஒப்புநோக்கு பட்டியலின் படி 0.003% குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு. ஜீவகன் ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** அனுமதி வழங்கலாம்
2) 0.003% குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு. ஜீவகன் ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி ஏற்று பணி உத்தரவு வழங்கலாம்.

5) இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 21 தேவர்சோலை சாலை முதல் கதவு எண்21/501 வீடு வரை சிமெண்ட் நடைபாதையுடன் கூடிய சிறிய பாலம் அமைக்க பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2017–2018 திட்ட நிதியின் செயல்முறை ஆணை Proc A5 No.2047/2019 நாள்01.07.2020ன் படி உத்திரவு அளித்துள்ளார். மேற்படி பணிக்கு 06.08.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விபரம் |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 21 தேவர்சோலை சாலை முதல் கதவு எண் 21/501 வீடு வரை சிமெண்ட் நடைபாதையுடன் கூடிய சிறிய பாலம் அமைத்தல். | ரூ. 5.00 | திருவாளர்.மார்பேசில் கன்ஸ்ட்ரக்சன் | 0.01% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | திரு. P.P.யாக்கோபு | 0.22% மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்படி ஒப்புநோக்கு பட்டியலின் படி 0.01% குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருவாளர்.மார்பேசில் கன்ஸ்ட்ரக்சன் ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** 1)அனுமதி வழங்கலாம்
2) 0.01%குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருவாளர்.மார்பேசில் கன்ஸ்ட்ரக்சன் ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி ஏற்று பணி உத்தரவு வழங்கலாம்.

6) இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 19 அதிகாரி வயல் பகுதியில் சிமெண்ட் சாலை அமைக்க பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2017–2018 திட்ட நிதியின் செயல்முறை ஆணை Proc A5 No.2047/2019 நாள்01.07.2020ன் படி உத்திரவு அளித்துள்ளார். மேற்படி பணிக்கு 06.08.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விபரம் |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 19 அதிகாரிவயல் பகுதியில் சிமெண்ட் சாலை அமைத்தல். | ரூ. 4.00 | திரு.உசைன் | 0.003% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | திரு. ஜீவகன் | 0.39% மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்படி ஒப்புநோக்கு பட்டியலின் படி 0.003% குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.உசைன் ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** 1)அனுமதி வழங்கலாம்

2) 0.003%குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.உசைன் ஒப்பந்ததாரா் அவா்களின் ஒப்பந்தப்புள்ளி ஏற்று பணி உத்தரவு வழங்கலாம்.

7) இந்நகராட்சியில் நடைபெறும் திட்டப்பணிகளுக்கான ஒப்பந்தபுள்ளி அறிவிப்புகள் மற்றும் விளம்பரங்கள் தினசரி நாளிதழ்களில் வெளியிடுவதற்கான உத்தேச செலவினம் ரூ.500000/– க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** அனுமதி வழங்கலாம்

8) இந்நகராட்சி அலுவலகத்தில் கூடுதல் அலுவலக கட்டிடம் கட்டும் பகுதியில் தேக்கு மரம் ஒவேலி சாலையோரம ஈட்டி மரம் நாவல் மரம் மற்றும் காட்டுமரம் உள்ளதால் கட்டிடம் கட்டுவதற்கு இடையூராக உள்ளது. இம்மரத்தினை வெட்டி அகற்ற வேண்டி உள்ளதால் தேக்குமரம் மற்றும் ஈட்டி மரம் வெட்டுவதற்கு வருவாய் கோட்டாட்சியா் கூடலுாா் அவா்களிடமிருந்து 19.08.2020 அன்று அனுமதி பெறப்பட்டுள்ளதால் நான்கு மரத்தினையும் வெட்டி வனத்துறை அலுவலகத்தில் சமா்பிக்கப்பட வேண்டி உள்ளதால் மரத்தினை வெட்டுவதற்கும் வாகனத்தில் எடுத்து சென்று வனத்துறை அலுவலகத்தில் ஒப்படைப்பதற்க்கு மதிப்பீடு தயாா் செய்வதற்கு உள்ளூா் விலைப்புள்ளி கோரி பொது நிதியில் பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** அனுமதி வழங்கலாம்

9) தமிழ்நாடு நகரியியல் பயிற்சி மையம், கோவை அவா்களின் கடித ந.க.எண்.276/2020/A2 நாள் 18.08.2020 பயிற்சி மையத்திற்கு 2020–2021 க்கான ஆண்டு சந்தா தொகை ரூ.20000/– வருடா வருடம் செலுத்துவது போன்று இவ்வருடம் நகராட்சியால் செலுத்தக் கோரப்பட்டுள்ளதால் மேற்படி தொகையான ரூ.20000/– செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** அனுமதி வழங்கலாம்

10) இந்நகராட்சிக்குட்பட்ட வாா்டு எண் 5 வனேஸ்வரி கோவில் சிமெண்ட் சாலை அமைக்க 26.02.2020 அன்று நடைபெற்ற மன்ற கூட்ட பொருட்களின் தீா்மானம் எண்.411 வ.எண்.33 வழங்கப்பட்டுள்ளது மேற்படி பணியினை மேற்கொள்ள ஒப்பந்தபுள்ளி 26.06.2020 ம் நாள் மாலை 3.30 மணிக்கு பெறப்பட்டதின் விபரம் கீழ் வருமாறு.

| வ.எண் | பணியின் பெயா் | மதிப்பீட்டு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரா் பெயா் | ஒப்பந்தப்புள்ளி விபரம் |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சிக்குட்பட்ட வாா்டு எண் 5 வனேஸ்வரி கோவில் சிமெண்ட் சாலை அமைத்தல் | ரூ. 5.40 | திரு.சபீஸ் | 0.04% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | திரு. விஸ்வநாதன் | 2.02% மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்படி ஒப்புநோக்கு பட்டியலின் படி 0.04% குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.சபீஸ் ஒப்பந்ததாரா் அவா்களின் ஒப்பந்தப்புள்ளி ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** 1)அனுமதி வழங்கலாம்

2) 0.04%குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.சபீஸ் ஒப்பந்ததாரா் அவா்களின் ஒப்பந்தப்புள்ளி ஏற்று பணி உத்தரவு வழங்கலாம்.

11) இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 7 கோழிப்பாலம் பகுதியில் உள்ள குடிநீர் தொட்டியினை சுற்றி கம்பி வேலி அமைக்க 26.02.2020 அன்று நடைபெற்ற மன்ற கூட்ட பொருட்களின் தீர்மானம் எண்.412 வ.எண்.39 வழங்கப்பட்டுள்ளது மேற்படி பணியினை மேற்கொள்ள ஒப்பந்தபுள்ளி 26.06.2020 ம் நாள் மாலை 3.30 மணிக்கு பெறப்பட்டதின் விபரம் கீழ் வருமாறு.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விபரம் |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 7 கோழிப்பாலம் பகுதியில் உள்ள குடிநீர் தொட்டியினை சுற்றி கம்பி வேலி அமைத்தல் | ரூ. 6.50 | திரு.சபீஸ் | 0.02% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | திரு. முகம்மது அலி | 5.93% மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்படி ஒப்புநோக்கு பட்டியலின் படி 0.02% குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.சபீஸ் ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** 1)அனுமதி வழங்கலாம்
2) 0.02%குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.சபீஸ் ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி ஏற்று பணி உத்தரவு வழங்கலாம்.

12) இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 12 கல்குவாரி பகுதியில் தடுப்புச்சுவருடன் கூடிய கழிவு நீர் கால்வாய் அமைக்க பொதுமக்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க தோராயமாக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.10.00 இலட்சத்திற்கு பொது நிதியின் கீழ் பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** அனுமதி வழங்கலாம்

13) இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 19 எஸ் எஸ் நகர் பகுதியில் அமைந்துள்ள சமுதாக கூடம் 2009–2010 ம் ஆண்டில் சொர்ண ஜெயந்தி திட்டத்தில் கட்டப்பட்ட கட்டிடம். தற்பொழுது பழுதுகள் ஏற்பட்டுள்ளதால் இப்பழுதினை சரி செய்ய தோராயமாக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.0.80 இலட்சத்திற்கு பொது நிதியின் கீழ் பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** அனுமதி வழங்கலாம்

14) இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 20 புறமணவயல் பகுதியில் மூடியுடன் கூடிய கழிவுநீர்கால்வாய் அமைக்க பொதுமக்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க தோராயமாக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.7.00 இலட்சத்திற்கு பொது நிதியின் கீழ் பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** அனுமதி வழங்கலாம்

15) இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 3 ராஜிவ் நகர் நடைபாதையுடன் கூடிய கழிவுநீர்கால்வாய் அமைக்க பொதுமக்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க தோராயமாக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.3.00 இலட்சத்திற்கு பொது நிதியின் கீழ் பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** அனுமதி வழங்கலாம்

16) கூடலூர் நகராட்சியானது நீலகிரி மாவட்டத்தில் 02.03.1974 முதல் தேர்வு நிலை பேரூராட்சியாக தரம் உயர்த்தபட்டபொழுது பேரூராட்சிக்கு கூடுதல் அலுவலக கட்டிடம் கட்டுவதற்கு 1992–1993 ம் ஆண்டில் SJSRY திட்டத்தின் கீழ் ரூ.1.35 இலட்சத்திற்கு அலுவலக கட்டிடம் கட்டப்பட்டது. இக்கட்டிடமானது 153.00 சதுர மீட்டர் பரப்பளவில் உள்ளதால் அலுவலக பயன்பாட்டிற்கு போதுமான இடம் இல்லாததாலும் பருவ நிலை மற்றும் சீதோஷ்ண நிலை காரணமாக சுவர் மற்றும் கூறைகள் பெயர்ந்து விழும் நிலையில் இருப்பதால் இக்கட்டிடமானது தற்பொழுது பயன்பாட்டிற்கு உகந்த நிலையில் இல்லாததால் இக்கட்டிடத்தினை இடித்துவிட்டு இவ்விடத்தில்

491.56 சதுர மீட்டர் பரப்பளவில் புதிதாக கூடுதல் அலுவலகம் கட்டிடம் கட்டுவதற்கு உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்புதல் திட்டம் 2016–17 ன் கீழ் ரூ.150.00 இலட்சத்திற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண். Roc.No.25306–12/2016/P2 நாள்.24.11.2016 ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு தலைமை பொறியாளர், சென்னை அவர்களிடம் திருத்திய தொழில் நுட்ப அனுமதியானது 06.03.2020 ல் வழங்கப்பட்டு 05.06.2020 ஒப்பந்த புள்ளி வரவேற்கப்பட்டுள்ளது. இப்பணிக்கு 23.07.2020 ல் பணி உத்திரவு வழங்கப்பட்ட நிலையில் தொழில்நுட்ப அனுமதியில் விதிக்கப்பட்ட நிபந்தனைகளின்படி பழைய கட்டிடத்தினை இடிப்பதற்கு முன் கட்டிடத்தின் உறுதி தன்மைக்கான சான்றிதழினை சம்பந்தப்பட்ட துறை அதிகாரியிடம் பெறப்பட வேண்டும் என தெரிவித்துள்ளதால் நகராட்சி நிர்வாக மண்டல செயற்பொறியாளர், திருப்பூர் அவர்களிடம் சான்றிதழை பெற்று பழைய கட்டிடத்தினை இடிப்பதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** அனுமதி வழங்கலாம்

17) இந்நகராட்சியின் 21 வார்டுகளில் குடிநீர் விநியோகம் செய்யும் முறையினை சீரான முறையிலும், குளோரிநேசன் கலந்து பாதுகாப்பான முறையில் குடிநீர் விநியோகம் செய்வதற்கும் டெங்கு காய்ச்சர் பரவுவதை தடுப்பதற்கு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக ஏழுமுறம், பள்ளிப்படி, யாணைசெத்தகொல்லி, அத்திபாளி,காரமூலா,நெம்பர் 4 தடுப்பணை பள்ளிப்படி, அம்பலக்காடு, பள்ளிப்படி டாக்டர் காலனி, நந்தட்டி, அண்ணா நகர், திருவள்ளுவர் நகர் மற்றும் விமல கிரி, சுள்ளிக்குன்னு ஆகிய பகுதிகளில் உள்ள கிணறுகள், ஹெல்த் கேம்பு, தொரப்பள்ளி மார்தோமாநகர், கோத்தரவயல் ஈ.பி.காலனி, கோக்கால் ஆகிய பகுதிகளில் உள்ள மேல் நிலை நீர்தேக்க தொட்டிகள் கே கே நகர் தடுப்பணை, அலஹலா, கோக்கால்,RDO அலுவலகம், கோழிப்பாலம், பள்ளிப்படி அம்பலக்காடு, பள்ளிப்படி டாக்டர் காலனி நந்தட்டி, அண்ணா நகர், திருவள்ளுவர் நகர், சளிவயல், மில்லிக்குன்னு,குறும்பர்பாடி, எம்.ஜி.ஆர் நகர், நர்த்தகி பின்புறம், நாயக்கன்மூலா, அத்திபாளி, கொக்ககாடு காலனி,விமலகிரி, சுள்ளிக்குன்னு,மாக்கமூலா, ஈப்பன்காடு, ஏழுமுறம், கண்மருத்துவமனை சாலை, இரண்டாவது மைல், மீனாட்சி, தட்டகொல்லி காலனி, தட்டகொல்லி மயானம், நிமினிவயல், யாணைசெத்தகொல்லி, பாரதி நகர்,தொரப்பள்ளி,நந்தட்டி ஆகிய பகுதிகளில் உள்ள தரைமட்ட நீர்தேக்க தொட்டிக்கு மற்றும் கோழிப்பாலம் வடிகால் படுகைகள் ஆகியவைகளை தூர்வாரி சுத்தம் செய்வதற்கும் 21 வார்டுகளிலும் குடிநீர் விநியோகம் செய்யும் குடிநீர் குழாய்களில் பழுதடைந்த உதிரிபாகங்களை மாற்றியமைத்து பாதுகாப்பான முறையில் குடிநீர் விநியோகம் செய்வதற்கு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டியிருப்பதால் மேற்கண்ட பணிகளை செய்வதற்கு தோராயமாக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.8.70 இலட்சத்திற்கு பொது நிதியின் கீழ் பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** அனுமதி வழங்கலாம்

18) இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் 13 LCV வாகனங்கள், 2 டிப்பர் வாகனங்கள்,1 காம்பாக்டர் வாகனம், 1 டிராக்டர் வாகனம் ஆகியவையும் பொதுப்பிரிவில் 3 ஈப்பு வாகனங்களும் இயக்கப்பட்டு வருகிறது. மொத்தமுள்ள 20 வாகனங்களில் 5 LCV வாகனங்கள் நிரந்தர தூய்மை பணியாளர்களாலும், 1 ஈப்பு வாகனம் மற்றும் டிராக்டர் வாகனம் ஆகியவை நகராட்சி ஓட்டுநர்களாலும் இயக்கப்பட்டு வருகிறது. எஞ்சியுள்ள வாகனங்கள் 12 ஒப்பந்த ஓட்டுநர்கள் மூலம் இயக்கப்பட்டு வருகிறது. அவர்களின் ஒப்பந்த காலம் 30.09.2020 அன்று முடிவடைவதால் புதிதாக ஒப்பந்த புள்ளி கோரி 12 ஓட்டுநர்களை ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்ய தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** 1) மன்றம் அனுதிக்கலாம்

2) ஓட்டுநர்கள் 12 நபர்களை ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்வதற்கு அனுமதி வேண்டி அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு கருத்துரு அனுப்பலாம்

19) இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள குடியிருப்புகள் மற்றும் வணிக வளாகங்களிலிருந்து நாள்தோறும் 14 மெட்டிரிக் டன் அளவு குப்பைகள் சேகரிக்கப்பட்டு முறைப்படி உரம் தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

அரசாணை நிலை எண்.101 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.30.04.1997 ல் வெளியிட்டுள்ள அளவு கோல் படி இந்நகராட்சி பொது சுகாதார பணிக்கு தேவையான தூய்மை பணியாளர்கள் விபரம் கீழ்க்கண்டவாறு கணக்கிடப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1) | 250 குடியிருப்புகளுக்கு 3 பேர் கொண்ட குழு வீதம் (15619/250x3) | 187 நபர்கள் |
| 2) | டிப்பர் லாரி இரண்டிற்கு | 8 நபர்கள் |
| 3) | LCV வாகனம் பதின்மூன்றிற்கு | 26 நபர்கள் |

| | | |
|---|---|---|
| 4) | காம்பாக்டர் வாகனம் ஒன்றிற்கு | 2 நபர்கள் |
| 5) | டிராக்டர் வாகனம் ஒன்றிற்கு | 2 நபர்கள் |
| 6) | பேரூந்து நிலையம் தூய்மை பணி | 4 நபர்கள் |
| 7) | நகராட்சி வணிக வளாக தூய்மை பணி | 4 நபர்கள் |
| 8) | உரக்கிடங்கு MCC | 20 நபர்கள் |
| 9) | Windrows | 6 நபர்கள் |
| 10) | பொது கழிப்பிட தூய்மை பணி | 10 நபர்கள் |
| | **மொத்தம் நபர்கள்** | **269 நபர்கள்** |

**தூய்மை பணியாளர்கள் செலவினங்கள் விபரம்.**

| | | | |
|---|---|---|---|
| 1) | நீலகிரி மாவட்ட ஆட்சியர் அவர்களின் தினக்கூலி பட்டியல்படி தூய்மை பணியாளர்களுக்கு 2019–2020 ம் ஆண்டுக்குரிய தினக்கூலி | : | ரூ.614 |
| 2) | ஒரு தூய்மை பணியாளருக்கு ஒரு ஆண்டுக்குரிய கூலி (ரூ.614x365) | : | ரூ.224110 |
| | EPF - 12% | : | ரூ.26893 |
| | ESI - 4.75% | : | ரூ.10645 |
| | சீருடை மற்றும் பாதுகாப்பு உபகரணங்களுக்கு ஒரு ஆண்டுக்குரிய தொகை | : | ரூ.1500 |
| | ஒப்பந்ததாரருக்குரிய நிர்வாக செலவு 5% | : | ரூ.11206 |
| | **மொத்தம்** | : | ரூ.274354 |
| 3) | 100 தூய்மை பணியாளர்களுக்கு ஒரு ஆண்டுக்குரிய செலவினம் (ரூ.274354x100) | : | ரூ.27435400 |

**மேற்பார்வையாளருக்கான செலவினங்கள் விபரம்.**

| | | | |
|---|---|---|---|
| 1) | நீலகிரி மாவட்ட ஆட்சியர் அவர்களின் தினக்கூலி பட்டியல்படி தூய்மை பணியாளர்களுக்கு 2019–2020 ம் ஆண்டுக்குரிய தினக்கூலி | : | ரூ.614 |
| 2) | இரு தூய்மை பணி மேற்பார்வையாளர்களுக்கு ஒரு நளைக்குரிய தினக்கூலி (ரூ.614x2) | : | ரூ.1228 |
| | EPF - 12% | : | ரூ.147 |
| | ESI - 4.75% | : | ரூ.58 |
| | ஒப்பந்ததாரருக்குரிய நிர்வாக செலவு 5% | : | ரூ.61 |
| | **மொத்தம்** | : | ரூ.1494 |
| 3) | 2 தூய்மை மேற்பார்வையாளர்களுக்கு ஒரு ஆண்டுக்குரிய செலவினம் (ரூ.1494x365) | : | ரூ.545310 |

மேற்கண்டுள்ள கணக்கீட்டின்படி இந்நகராட்சி பொது சுகாதார பணிக்கு 269 தூய்மை பணியாளர்கள் தேவைப்படுகின்றனர். தற்போது இந்நகராட்சியில் 25 நிரந்தர பணியாளர்கள் மட்டுமே பணிபுரிந்து வருகின்றனர். இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் செவ்வனே செய்ய கூடுதலாக 244 தூய்மை பணியாளர்கள் ஒப்பந்த புள்ளி கோரி ஒப்பந்தாரர் மூலமாக ஈடுப்படுத்த வேண்டி உள்ளது. தற்போதைய நகராட்சி நிதி நிலமையை கருத்தில் கொண்டு பொது சுகாதார பணிக்கு 80 தூய்மை பணியாளர்கள், இரு MCC தூய்மை பணிக்கு 20 தூய்மை பணியாளர்கள் மற்றும் 2 தூய்மை பணி மேற்பார்வையாளர்கள் ஆகியோரை ஒப்பந்த புள்ளி கோரி ஒப்பந்ததாரர் மூலமாக பணியில் ஈடுபடுத்தவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ. 280.00 இலட்சத்திற்கும் தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** 1) மன்றம் அனுதிக்கலாம்

2) தூய்மை பணியாளர்கள் 100 நபர்கள் மற்றும் 2 தூய்மை பணி மேற்பார்வையாளர்களை ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்வதற்கு அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு கருத்துரு அனுப்பலாம்

20) இந்நகராட்சி அலுவலகம் மற்றும் அம்மா உணவகத்திற்கு வரும் பொது மக்களுக்கு கொரோனா தொற்று பரவாமல் தடுக்கும் நடவடிக்கையாக தானியங்கி கை கழுவும் இயந்திரம் 3 இடங்களில் அமைப்பதற்கான உத்தேச செலவினம் ரூ.1.00 இலட்சத்திற்கு தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** 1)அனுமதி வழங்கலாம்
2)பொது சுகாதார அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணியினை மேற்கொண்டதை ஏற்கலாம்

21) இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவிற்கு தேவையான மண்வெட்டி, கொத்துமுள், கத்தி மற்றும் பிளாஸ்டிக் கூடை ஆகிய தளவாடப் பொருட்கள் வாங்குவதற்கான உத்தேச செலவினம் ரூ.2.00 இலட்சத்திற்கு தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** 1)அனுமதி வழங்கலாம்
2)பொது சுகாதார அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணியினை மேற்கொண்டதை ஏற்கலாம்

22) இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவு வாகனம் TN 43 Y 8293 ன் தகுதி சான்று காலம் நிறைவு பெற்றமையால் வாகனத்திலுள்ள பழுதுகளை டாட்டா மோட்டார்ஸ் நிறுவன பணிமனையில் விலைப்புள்ளி பெற்று பழுது நீக்கம் செய்து தகுதி சான்று பெறுவதற்கு தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** 1)அனுமதி வழங்கலாம்
2)பொது சுகாதார அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணியினை மேற்கொண்டதை ஏற்கலாம்

23) இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் கொசு ஒழிப்பு புகை இயந்திரங்களில் ஏற்பட்ட பழுதுகளை நீக்கம் செய்வதற்கான உத்தேச செலவினம் ரூ.1.00 இலட்சத்திற்கு தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** 1)அனுமதி வழங்கலாம்
2)பொது சுகாதார அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணியினை மேற்கொண்டதை ஏற்கலாம்

24) இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா தொற்று பரவாமல் தடுக்கும் நடவடிக்கையாக கட்டுப்படுத்தப்பட்ட பகுதிகள் மற்றும் மக்கள் கூடும் இடங்களில் பொது மக்களுக்கு கபசுர குடிநீர் வழங்கும் பணியினை மேற்கொள்ளவும் அதற்கு தேவையான கபசுர பொடியினை வாங்குவதற்கான உத்தேச செலவினம் ரூ.1.00 இலட்சத்திற்கு தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** 1)அனுமதி வழங்கலாம்
2)பொது சுகாதார அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணியினை மேற்கொண்டதை ஏற்கலாம்

**ஆணையாளர்**
**கூடலூர் நகராட்சி (நீலகிரி)**